செ.வெ.எண்.69 நாள்.29.12.2017.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநெல்வேலி மாவட்ட ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் வரைவு வார்டுகள் மறு வரையறை தொடர்பாக அங்கீரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருநெல்வேலி மாவட்ட ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் வரைவு வார்டுகள் மறு வரையறை தொடர்பாக அங்கீரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்களுடான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.12.2017) நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது-

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள வார்டுகள் 2011 மக்கள் தொகை அடிப்படையில், சராசரியாக பிரிக்கப்பட்டு மறு வரையறை செய்யப்பட்டு, 27.12.2017 அன்று அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் 55 வார்டுகளும், நகராட்சி பகுதியில் மொத்தம் 195 வார்டுகளும், பேரூராட்சி பகுதிகளில் உள்ள 572 வார்டுகளும் மறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 19 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 425 கிராம ஊராட்சிகளில் மாவட்ட ஊராட்சி வார்டு மொத்தம் 26ம், ஊராட்சி ஒன்றிய வார்டுகள் மொத்தம் 266ம், கிராம ஊராட்சி வார்டுகள் 3636ம் மறு வரையறை செய்யப்பட்டுள்ளது. வார்டுகள் மறு வரையறை செய்யப்பட்டுள்ள வரைவு கருத்துக்கள் மீது பொதுமக்கள் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிக்கும் வகையில் கிராம ஊராட்சி அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மாவட்ட ஊராட்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், உதவி இயக்குநர் ஊராட்சிகள் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரையறை மீது கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை தெரிவிக்க விரும்பும் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகளை எழுத்து பூர்வமாக சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர் ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சி செயலர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரிடையாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ 02.01.2018 மாலை 5.45 மணி வரை தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, அரசியல் கட்சி பிரமுகர்கள் எழுத்து பூர்வமாக தங்களது கருத்துக்களை அளிக்க வேண்டும். உங்களின் கருத்துக்கள்அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பப்படும். 30.12.2017 மற்றும் 31.12.2017 ஆகிய விடுமுறை நாட்களிலும் அலுவலகங்கள் திறந்திருக்கும். பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் பார்வையிடலாம். தங்களது கருத்துக்களை 02.01.2018 மாலைக்குள் தெரிவிக்க வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (உள்ளாட்சித் தேர்தல்) திருமதி.வசந்தி, மாநகராட்சி ஆணையாளர் (பொ) திரு.நாராயணநாயர், உதவி ஆணையாளர்கள் திருமதி.கவிதா, திரு.பாஸ்கர், திருமதி.கீதா மற்றும் அங்கீரிக்கப்பட்ட அரசியல் பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.